# எச். ஐ. வி / எயிட்ஸ் சட்டம், 2017-ஐ அறிந்துக் கொள்வோம்

- இச்சட்டம், எச்.ஐ.வி . தொற்றுடையவர்கள் அல்லது எச்.ஐ.வியால் பாதிக்கபட்டவர்களை **"பாதுகாக்கப்பட்ட நபர்கள்"** என்று வரையறுக்கிறது - **(பிரிவு 2 (s))**

- இச்சட்டம், வேலைவாய்ப்பு (பொது அலுவல் பணியேற்க), கல்வி, சுகாதாரம், பயணம் மற்றும் காப்பீடு போன்றவற்றில் பாகுபாடு காட்டுவதற்கு எதிராக பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்கிறது. மேலும் எச்.ஐ.வியோடு வாழ்பவர்களும், அதனால் பாதிப்பிற்கு உள்ளனாவர்களும் பொது வசதிகளை பயன்படுத்தும் போது நியாமற்ற முறையில் நடத்தப்படுவதை கண்டிப்போடு தடை செய்கிறது - **(பிரிவுகள் 3, 4 )**

- இச்சட்டம், "**தெரிவிக்கப்பட்ட ஒப்புதலோடு**" எச்.ஐ.வி. தடுப்பு, பரிசோதனை, ஆற்றுப்படுத்துதல் போன்றவற்றை பெறும் உரிமையை உறுதி செய்கிறது - (**பிரிவுகள் 5, 13, 14)**

- இச்சட்டம், நல திட்டங்கள் பெறுவதை குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் எச்.ஐ.வி. சிகிச்சையில் உள்ளவர்கள் பெறுவதை வரையறுக்கிறது - **(பிரிவுகள் 9, 16, 18, 32, 33)**

- இச்சட்டம், பாகுபாடு காட்டி வெளியேற்றப்படுவதை தடுக்கும் வண்ணம், **"பகிரப்பட்ட இருப்பிடத்தில்"** குடியிருத்தல், அதை வாடகைக்கு விடுதல், விலைக்கு வாங்குதல், சுவாதீனப்படுத்திக்கொள்ளல் போன்ற உரிமையை உறுதி செய்கிறது - **(பிரிவு 29)**

- இச்சட்டப்படி, எச்.ஐ.வி./எயிட்ஸால் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் பதினெட்டு வயதிற்கு கீழுள்ள ஆனால் பனிரெண்டு வயதிற்கு மேலுள்ளவர், பதினெட்டு வயதிற்கு கீழுள்ள தனது உடன்பிறந்தவர்களுக்கு கல்வி நிலையங்களில் சேர்க்கை பெறுதல், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, சிகிச்சை, வங்கி கணக்குகளை இயக்குதல், சொத்தை நிர்வகித்தல் போன்ற நோக்கத்திற்காக **"பாதுகாவலராக"** இருக்கலாம் - **(பிரிவுகள் 32, 33)**

- இச்சட்டப்படி, குற்றவியல் மற்றும் உரிமையியல் சட்ட நடவடிக்கைகளின் படி வழக்குகளை மேற்கொள்ளலாம் - **(பிரிவுகள் 37, 38, 39, 42).** மாநில அரசால் நியமிக்கப்பட்ட **"குறைதீர்ப்பாணையரிடமும்"** முறையிட்டு தங்களின் குறைகளுக்கு சட்டபூர்வமான தீர்வு பெறலாம் – (**பிரிவு 23)**

- இச்சட்டப்படி, எச்.ஐ.வியால் பாதிக்கபட்டவர் தொடர்பான அல்லது சார்பான வழக்குகளை நீதிமன்றம் முன்னுரிமை கொடுத்து நடத்தி தீர்வு காணலாம். - **(பிரிவு 34(2))**

- இச்சட்டப்படி, ஒருவரின் எச்.ஐ.வி.நிலை தொடர்பான இரகசியத்தன்மையை மீறினால் ரூபாய் ஒரு இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் **(பிரிவு 39).** பாதுகாக்கப்பட்ட நபர்களை பிறருக்கு அடையாளம் காட்டி (அச்சு முறையிலும்), அவர்களுக்கு எதிராக வெறுப்பு, பாகுபாடு அல்லது உடல் ரீதியான வன்முறை ஆகியவற்றை தூண்டினால் மூன்று மாதத்திற்கு குறையாமல், இரண்டு ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் ரூபாய் ஒரு இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் - **(பிரிவுகள் 8-10, 34(1)(d), 37)**